இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையை 'ஏ' பிரிவாக மாற்றவேண்டும் என்கிற முயற்சியை எடுத்துக்கொண்டது மக்கள் கருத்து திரட்டப்பட்டது. பாராளுமன்றத்தில் கழக உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் தீர்மானம் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் சுற்றுப்புற நகரங்களை எல்லாம் சேர்த்து சென்னையை 'ஏ' பிரிவு நகரமாக ஆக்கினார்கள். மதுரை 'பி' பிரிவாக ஆக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இங்குள்ள அரசாங்கச் சிப்பந்திகளுக்கு அலவன்ஸ் கிடைக்கிறது. கோவை நகரமும் 'பி' பிரிவாக ஆக்கப்படுவதற்கு எல்லா அம்சங்களும் இருக்கின்றன. ஆயினும் நகரசபை உரிமையாளராகிய முனிசிபாலிட்டி கணக்கு குறைவாக இருப்பதால் ஆக்க முடியவில்லை. அந்தக் கணக்கு சரியானதும் அல்ல. ஆகவே இதனை வற்புறுத்தி கோவையைச் சுற்றியுள்ள புற நகரங்களையும் இணைத்து அதை 'பி' பிரிவாக ஆக்கவேண்டும் என்பதை இந்த அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தித் தெரிவிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : கோவை 'பி' பிரிவு நகரமாக அறிவிக்கப் படாத காரணத்தினால் அங்குள்ள மத்திய அலுவலக ஊழியர்களுக்கும் சரி, மாநில ஊழியர்களுக்கும் சரி, எல்.ஐ.சி. ஊழியர்களுக்கும் சரி, நகர ஈட்டுப்படி, வீட்டுவாடகைப்படி போன்றவை கிடைக்காது இருக்கிறது. அது 'பி' பிரிவு நகரமாக ஆக்கப்பட வேண்டிய எல்லா அம்சங்களும் இருப்பதனால் உடனடியாக அதை 'பி' பிரிவு நகரமாக—புற நகரங்களையும் சேர்த்து—ஆக்குவதற்கு மத்திய அரசுக்கு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் நான் சொன்னேன். அவர்களுடைய கணக்குப்படி மதுரை நகரத்திலே முனிசிபாலிட்டியிலேயே ஜனத் தொகை அதிகமாக இருக்கிறது. கோவையை எடுத்துக் கொண்டால் புற நகரங்களான சிங்கநல்லூர், பீளமேடு போன்ற பகுதிகளைச் சேர்த்தால் வருகிறது. சென்னை நகரத்தை 'ஏ' நகரமாக ஆக்காமல் முன்பு வைக்கப்பட்டு இருந்ததே அதைப்போல்தான் கோவை நகரமும் வைக்கப்பட்டு இருக்கிறது. அதையும் உயர்த்தவேண்டுமென்ற உறுப்பினரின் அனுதாப உணர்ச்சியை இந்த அரசு மிகுந்த ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டு அதை மத்திய அரசுக்கு வற்புறுத்தும். அதிலே வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

Small Savings Cultural Show,

* 56 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the expenditure incurred by the Government in connection with the Small Savings Cultural Show held at Madras on 25th February 1968; and

(*b*) the amount realised from the show?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) சென்னை மாநகரில் 25—2—1968 அன்று நடந்த சிறு சேமிப்பு கலைவிழாவிற்காக சுமார் ரூ. 35,900 அரசாங்கத்தால் செலவிடப்பட்டது.

(இ) சிறுசேமிப்புப் பத்திரங்கள் மூலம் ஏறத்தாழ ரூ. 81 லட்சம் வசூலாயிற்று. இதைத் தவிர கலைவிழா நடந்த அன்று நேரு பந்தய அரங்கில் அனுமதிச் சீட்டுகள் விற்ற வகையில் ரூ. 19,800 வசூலாயிற்று.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே நடத்துவதைப்போல் இந்த சிறு சேமிப்பு கலை நிகழ்ச்சிகளை மதுரை, திருச்சி, கோவை போன்ற நகரங்களிலும் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: சிறு சேமிப்பிலே மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிற பேரார்வத்தை நான் பாராட்டுகிறேன். அதனுடைய தொடர்ச்சியாக சென்னை நகரத்திலே வருகிற 1-ம் தேதி 2-ம் தேதிகளில் நிகழ்ச்சிகள் நடக்க இருக்கின்றன. சென்ற ஆண்டு 90 லட்ச ரூபாய்வரை சேர்ந்தது. சிறு சேமிப்பு உதவித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். தலைமையில் இந்த விழாக்கள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்த விழாக்கள் இன்னும் வெற்றிகரமாக நடைபெற மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஆதரவளிக்க முன்வரவேண்டும். இதைத் தொடர்ந்து விழாக்கள் நடத்தலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 81 லட்சம் ரூபாய் வரவும் 19 லட்சம் ரூபாய் செலவும் ஆயிற்று என்று சொன்னார்கள். (குறுக்கீடு) ஆயிரக்கணக்காகக்கூட இருக்கலாம். அந்த அளவுக்கு செலவு ஏற்பட்டது நியாயமான செலவா என்று ஒரு அறிக்கையை இந்தச் சட்டமன்றத்திலே வைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்பவும் குழப்பிக்கொள்கிறார்கள். ரூ. 81 லட்சம் பத்திரங்கள் மூலமாக வந்தது. சிறு சேமிப்புப் பத்திரங்கள் மூலமாக எவ்வளவு வந்தது என்பது ஒரு கேள்வி. கலை விழாக்களுக்கு என்ன செலவாயிற்று என்பது ஒரு கேள்வி. இரண்டும் தனித் தனிக் கேள்விகள். பத்திரங்கள் மூலமாகத்தான் 81 லட்சம் ரூபாய் வந்தது. அதுதான் வரவுக் கணக்கு. செலவைப் பொறுத்தவரையில் 35,900 ரூபாய் ஆயிற்று. அதிலும்கூட 16 ஆயிரம் ரூபாய் மத்திய அரசு கொடுக்க வேண்டியிருக்கிறது. மாநில அரசுக்கு அதனால் எந்தவிதமான நஷ்டமும் இல்லை. மத்திய அரசு 16,000 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். அதைப் பெறுவதற்கான முயற்சிகளை மாநில அரசு எடுத்துள்ளது.

Supply of pesticides.

* 57 *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state:

(*a*) whether the Committee on Estimates in its report dated 10th August 1965 on the Community Development Programme recommended that pesticides should be sold at a subsidised rate of 50 per cent of cost to all the ryots as in the case of non-food crops like cotton, oil-seeds and sugarcane; and